

# சாளரம்
# CHAALARAM

சித்திரை-ஆடி Apr - Jul 2014
ஒளி-07 கீற்று- 02

அனைவருக்கும் எமது ஜய வருடப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பாடசாலையின் பரிசளிப்பு விழா பெற்றோர், ஆசிரியர்கள், மறறும் கழக உறுப் பினர்களின் பேராதரவுடன் மிகவும் வெற்றிகர மாக நடந்து முடிந்துள்ளது. எமது இவ்விழாக் கள் அனைத்தும் உங்கள் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் நடைபெறுவதால் மேலும் தமிழ்ப்பாடசாலை வளர்ச்சி காணும் என்பது நமது நம்பிக்கை. விழாக்கள் என்றாலும் சரி, விளையாட்டுப்போட்டி என்றாலும் சரி எல்லாமே எமது வளரும் சமுதாயமான மாணவச் செல்வங் களின் நலம் கருதியே நடைபெறுவதால் இவ்விழாக்களில் ஏதாவது பிழைகள் நடைபெற்றிருந்தாலும் அவற்றை எல்லாம் நாம் பொறுத்து இனிவரும் காலங்களில் அப்பிழை கள் ஏற்படாமலிருக்க பெற்றோர்களாகிய நீங்கள் அனைவரும் எம்மோடு கைகோர்த்து இந்தத் தமிழ்ப் பாடசாலை மேலும் மேலும் வளர அனைத்துப் பெற்றேர்களும் உதவும்படி வேண்டுகின்றோம்.

தமிழ்ப் பரீட்சைகள் நெருங்குவதால் அனைத்து மாணவர்களும் ஒவ்வொரு வாரமும் தவறாது பாடசாலைக்கு வந்து ஆசிரியர்களால் நடாத்தப்டும் கடந்த காலப் பரீட்சை வினாத்தாள் களை திரும்பத் திரும்பச் செய்து பழகுவதால் பரீட்சையில் நன்றாகச் செய்து அதிவிசேட சித்தியை அடையலாம்.

கடந்த ஆண்டு விளையாட்டுப் போட்டி நடைபெற்றதால் இவ்வாண்டு விளையாட்டுப் போட்டி நடைபெறாது. இவ்வாணடு கழகத்தின் பதினைந்தாம் ஆண்டைக் கொண்டாட கலை விழாவிற்கான ஏற்பாடுகள் நிகழ்நதுக் கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில் கலைவிழாவிற்கான திகதி உங்களிற்கு அறிவிக்கப்படும். பெற்றோர்கள் அனைவரும் உங்களாலான உதவிகளை எமக்கு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இந்தத் தவணைக்கான உங்கள் பிள்ளைகளின் கட்டணங்களை செலுத்தி பற்றுச் சீட்டை பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்.

**25.04.2014 தவணைக்கான பாடசாலை ஆரம்ப ம்**

02.05.2014 வெள்ளிக்கிழமை

09.05.2014 வெள்ளிக்கிழமை

16.05.2014 வெள்ளிக்கிழமை

23.05.2014 வெள்ளிக்கிழமை

30.05.2014 **பாடசாலை இடைத்தவணை விடுமுறை**

**06.06.2014** வெள்ளிக்கிழமை

07.06.2014 **சனிக்கிழமை காலை அனைத்துலகத் தமிழ்ப் பரீட்சை வளர்நிலை**

13.06.2014 வெள்ளிக்கிழமை

20.06.2014 வெள்ளிக்கிழமை

27.06.2014 வெள்ளிக்கிழமை

04.07.2014 வெள்ளிக்கிழமை

**11.07.2014** வெள்ளிக்கிழமை

18.07.2014 வெள்ளிக்கிழமை

**25.07.2014 தவணைக்கான பாடசாலை இறுதி நாள்**

**முக்கிய அறிவிப்பு**

**கேட்டல, வாசித்தல், பேசுதல் பரீட்சை தினம் பின்னர் அறிவிக்கப்படும்.**



# பொய்யில் புலவர் கண்ட பொருளாதாரம்

பொருளாதாரம் என்ற கொள்கை கி.பி.1800க்கு முன் உலகில் யாராலும் தனித்துறையாக எடுத்துக் கொண்டு ஆராயப்படவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அடம்சிமித் (Adam Smith) என்பவர் தொடங்கி வைத்தார். அதனை அல்பிரட் மார்ஷல் (Alfred Marshal) என்பவர் காரணங் களைக் காட்டி விஞ்ஞான முறையில் பிரித்து வளர்த்தார். பின்னர் கார்ல்ஸ் மார்க்ஸ்(Carl Marks) அழுத்தமாகவும், ஆழமாகவும் அலசினார். உலகிலுள்ள இணையான நிலை மறைந்து ஏற்றத்தாழ்வு நிலை அமைந்தமைக்குப் பொருளாதாரச் சீரமைப்பு இன்மையே காரணம் என்பது அவர் மூலக் கருத்து.

அதன்பின்பு பல அறிஞர்கள் பொருளாதாரம் என்னும் கொள்கையைப் பலவாறு தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஆராய்ந்து பலவகையான கருத்துக்களை கூறிக்கொண்டு இருக்கின்றனர். ஆயினும் ஆரம்பத்தில் கூறியவர்களின் கருத்துக்களைவிட புதிதாகக் கருத்துக்கள் எதுவும் தோன்றவில்லை. பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைகள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.

நிலம்,தொழிலாளி,தொழில் அமைப்பு நிருவாகம், மூலம் என நான்கு கிளைகளை அடிப்படையாக வைத்து அது ஆராயப்படும். ஒரு நாற்காலி செய்வதாக வைத்துக் கொண்டால் நாற்காலிக்குத் தேவையான மரம், நிலம் எனப்படும். அதனைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உளி மதலிய ஆயுதங்கள் மூலம் எனப்படும். அதனை உருவாக்குபவன் தொழிலாளி என்ற பகுதியில் சேர்வான். இவ்வாறான அடிப்படைகளின் மேல் கட்டப்படுகின்ற கொள்கைகளே பொருளாதாரம் என்ற தலைப்பில் அடங்கு கின்றன.

பொய்யாமொழியார் பொருளாதாரம் பேசுகின்றாரா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வள்ளுவர், இருநூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய பொருளாதாரக் கொள்கையை எடுத்துச் சொல்லியுள்ளார் எனக்கூறுவது ஆசை பற்றியா? அல்லது உண்மை பற்றியா? ஆராய்ந்து காண்போம்.

வள்ளுவர் பொருளியல் என்ற பொருட்பாலில் கூறும் கருத்துக்கள் கூர்ந்து கவனிக்கத்தக்கவை. பொருள் என்பதற்கு அவர் கொண்டுள்ள பொருளே பழமையிலிருந்து வேறுபட்ட பொருளாம். தொல்காப்பியரும், சங்கப் பாவலரும், பொருள் என்பது அகப்பொருள், புறப்பொருள் எனப் பிரித்துப் பேசி இலக்கணத்தையும்,இலக்கியங்களையும் ஆக்கியுள்ளனர். காதல் வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் அகப்பொருளாகும். ஆனால், அவற்றைக் காமத்துப் பாலிலும் இல்லறவியலிலும் வள்ளுவர் வகை செய்து அமைத்துவிட்டார். போர் முறைகளே புறப் பொருள் என்ற பெரும்பான்மைக் கருத்தைக் குறைத்து, அதன் உயிர்க் கருத்துக் களை மட்டும் எடுத்துக் கொண்டு அரசன், அமைச்சன்,குடிமக்கள் என்று பாகுபாடும் செய்து கொண்டு தம் பொருளியிலை வடித்துள்ளார். வள்ளுவரின் இந்தப் பொருளியிலில் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மின்னுகின்றன.

அல்பிரட் மார்ஷல் (Alfred Marshal) வறுமையின் கொடுமையை அழகுற வடித்துக் காட்டி அச்சிறுமையை நீக்க வழிகாட்டுகிறார். வறுமை, வறுமையடைய வேண்டுமானால் வேளாண்மையே வழி என்று மார்ஷல் எடுத்துக் காட்டுகின்றார். நம் வள்ளுவர் நல்குரவு என்ற அதிகாரத்தைக் குடியியலில் அமைத்துள்ளதை எல்லோரும் அறிவர். வள்ளுவரே, வறுமையை விளக்க ஓர் உவமை தாருங்கள்! எனக் கேட்டபின் அதற்கு உவமை வறுமையே என்று கூறுகிறார். அழகுற வடிக்கும் அவர் கவியைப் பாருங்கள்.

"இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னாதது."

நெருப்பினுள் உறங்கும் மனிதனால் கூடும், ஆனால் வறுமையில் வாடுபவன் உறங்குதல் என்பது ஆகாத ஒன்றாம் என வள்ளுவர் கூறும் வாய்மை என்றும் வாய்மையே.

சமுதாயத்தில் விதி என்ற ஒன்றினைப் புகுத்தி, எதனையும் பகுத்தறிவு கொண்டு ஆராயாமல் தடுத்துத் தங்கள் சீர்கேடுகளுக்குத் தாமே காரணம் என உணர்வதற்கின்றி, அறிஞர்கள் மக்களை அல்லலுக்குள் ஆழ்த்திவிட்டனர் என்பார் கார்ல் மார்க்ஜ். விதி என்ற ஒன்று சமுதாய வளர்ச்சியை தடுக்கவில்லை. அறியாமையே அல்லல் செய்து அழிக்கின்றது. அதை நீக்க கல்வி வேண்டும் என அவர் எடுத்துக் காட்டுகிறார். ஒருவனின் வறுமைக் கு விதி காரணமில்லை என்பது வள்ளுவருக்கும் உடன்பாடே. தெய்வத்தால் ஆகாது என்றாலும் எந்த அளவுக்கு உழைக்கிறோமோ அந்த அளவு கூலியாவது கிடைக்கும் மடி நீக்கிக் குடி செய்ய ஒருவன் விரும்பின் தெய்வம் மடிதற்றுத்தான் வந்து உதவும். உலைவின்றித் தாழாது ஊஞற்றின் ஊழையும் உப்பக்கம் காணலாம். இவை போன்ற கருத்துக்கள் பொய்யில் புலவரின் பொய்யா மொழிகளன்றோ?

இன்றைய சமுதாய வளர்ச்சியில் தேவைகள் அளவற்றுப் பெருகுவதும், அதை நிறைவு செய்யப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவதும் இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து இரு இணைகோடுகளாக ஈர்த்துக் கொண்டு செல்வதும் இன்றைய இன்றியமையா நிலைகளாக உள்ளன. பொருள் உற்பத்தியைப் பெருக்கவதற்குக் கருவிகளின் துணைகொண்டு இயந்திர ஆற்றலைப் பெருக்குவதே வழி என்பது இன்றைய பொருளாதார வல்லுனர்கள் கருத்து. மின் ஆற்றல்,கனிமப் பொருட்களால் ஆன கருவிகள்,கல்வியறிவு ஆகிய மூன்றின் துணை கொண்டு பல்வேறு பொருட்களைப் படைக்கின்ற னர். அப்படைப்பின் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற கூறுகின்றனர். வள்ளுவர் இவ்வாறு விவரித்துக் கூறவில்லலையாயினும் அதனைக் குறித்துப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்நகும்"

என்ற குறளின் கருத்தை ஆராய்வது நமக்குத் தெளிவைத் தரும். அறியாமையால் விலங்கொடு ஒத்து விதியை எண்ணும் மனிதன் நிலத்தின் மேல் பழிகூறி நிற்பான். அவ்வாறு நிற்பானாகின் அவன் அறியாமையைக் கண்டு நிலமகள் சிரிப்பாள். அதாவது மனிதன் கல்வியால் அறிவு பெற்று நிலத்தின் பெருமையை உணர்தல் வேண்டும்.

**கண்பார்வை அதிகரிக்க**

மலைவாழைப்பழம் ஆப்ரிகாட் பழம் ஆகியவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அதனுடன் அரை கப் தயிர் கலந்து ஒரு மணி நேரம் ஊறவைத்து இரவில் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை அதிகரிக்கும். கேரட் துவரம் பருப்பு தேங்காய் ஆகியவற்றை சேர்த்து சமைத்துக் கொள்ளவேண்டும். அதை சாதத்தில் கலந்து சாப்பிட்டு வந்தால் கண்பார்வை அதிகரிக்கும். கடுக்காய்த் தோல் நெல்லிக்காய் இரண்டையும் கொட்டை நீக்கிக் காயவைத்து பொடி செய்து தினமும் மூன்று கிராம் வீதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வை ஆற்றல் அதிகரிக்கும். கண் குளிர்ச்சி பெறும். சீரகம் கொத்தமல்லி விதை மற்றும் வெல்லம் ஆகிய மூன்றையும் எடுத்து நன்றாக இடித்து பொடியாக்கி சலித்து கொண்டு காலை மாலை இந்த பொடியை சாப்பிட்டு தண்ணீர் குடித்து வந்தால் கண் பார்வை தெளிவாகும். இருவாட்சி சமூலத்தை பாலில் அரைத்து பாலில் கலந்து சாப்பிட கண் பார்வை அதிகரிக்கும். பாதாம் பருப்பு மற்றும் மிளகை எடுத்து நன்றாக பொடித்து தினமும் 2 முறை இந்த பொடியை சாப்பிட்டு தண்ணீர் குடித்து வந்தால் கண் பார்வை தெளிவடையும். கீழாநெல்லி இலை மூக்கிரட்டை இலை பொன்னாங்கண்ணி இலை ஆகியவற்றை எடுத்து நன்றாக அரைத்து மோரில் கலக்கி தொடர்ந்து குடித்து வந்தால் கண் பார்வை தெளிவடையும். பொன்னாங்கண்ணி இலையை காலையில் மென்று தின்று பின்பு பால் குடித்து வந்தால் கண்பார்வை தெளிவாகும்.

**கண் நோய்கள் குறைய**

பாகல் இலைகளை சிறிதளவு எடுத்து அதனுடன் ஆறு மிளகைச் சேர்த்து மை போல அரைத்து இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக கண்களை சுற்றிக் கனமாகப் பூசவேண்டும். பின்பு காலையில் எழுந்தவுடன் கழுவி விடவேண்டும். இவ்வாறு ஒரு வாரம் தொடர்ந்து செய்து வந்தால் கண் பார்வை குறைபாடு குறையும். அன்னாசிப்பழத்தை எடுத்து தோல்களை சீவி சுத்தம் செய்து தினமும் சாப்பிட்டு வந்தால் கண் நோய்கள் குறையும். ஆதண்டை இலையை நல்லெண் ணெயில் காய்ச்சி வடித்து தலைக்கு தேய்த்துக் குளிக்க கண் பார்வை மறைத்தல் குறையும். பிரம்மதண்டு பூவை நீரில் ஊறவைத்து அந்த நீரை தலைக்கு தேய்த்து குளிக்க கண் நோய்கள் குறையும். அஜ்மோதக இலைகளைக் கூட்டாகச் செய்து சாப்பிட்டு வந்தால் கண் கோளாறுகள் குறையும். பீட்ரூட் இலைகளை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் கண் கோளாறுகள் குறையும். புளியாரை இலைகளை நீரில் ஊற வைத்துஇ இந்நீரால் கண்களைக் கழுவி வந்தால் கண் கோளாறுகள் குறையும்.








# Kids Side!

# சிறுவர் பகுதி!




Colour in the Father's Day Picture. The best five coloured in pictures will be shown in assembly and you will get a prize. The best one will be published in the next chalaram. In the box underneath, draw a picture of an event which will happen  in April to July this year, e.g. World Cup, Wimbledon, Tour de France.

மேலுள்ள தந்தையர் தினம் படத்தை வர்ணம் தீட்டி அனுப்புங்கள். திறமையான ஐந்து படங்கள் கூட்டத்தில் காட்டப்டிடும. அதுவுடன் ஒரு பரிசும் கடைக்கும். திறமையான ஒன்று அடுத்த சாளரத்தில் காட்டப்படும். அதற்குக் கீழ் உள்ள பெட்டியில் ஒரு ஓவியத்தை வரைந்து அனுப்புங்கள். அந்தப் படம் அடுத்த நான்கு மாதங்களுக்குள் நடக்கும் ஒரு சம்பவத்தை காட்ட வேண்டும்.

Send your kids page to this address:
64 Glencoe Avenue,
Ilford,
Essex,
IG2 7AN

Send any piece of wrtiting (jokes, stories) to the address at the bottom of the page and we will publish it in the next chalaram.

## Easter Word Search

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| q | r | x | l | i | d | o | f | f | a | d | e |
| a | g | y | t | e | n | n | o | b | g | g | u |
| h | n | n | s | c | j | v | s | e | g | e | g |
| k | i | n | t | e | t | r | t | b | x | c | t |
| r | r | u | z | b | e | a | r | b | s | j | v |
| o | p | b | o | w | l | c | e | r | c | q | p |
| u | s | b | o | o | t | h | t | k | u | h | a |
| h | r | l | c | w | e | i | s | t | h | h | r |
| d | f | o | f | l | k | c | a | l | t | w | a |
| b | h | r | n | m | s | k | e | v | n | o | d |
| c | y | x | f | i | a | s | y | u | u | t | e |
| j | n | g | e | b | b | q | o | c | h | p | y |

basket bonnet bunny chicks
chocolate daffodil easter egg
flowers hunt parade spring